[2003 ஏப்ரல் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கேள்விதான் கேட்கலாம். ஏதோ ஒரு கேள்வி மட்டும் கேளுங்கள்.

திரு. வெ. ஏழுமலை: நடப்பட்டதாகக் கூறப்பட்ட கன்றுகள் எல்லாம் காய்ந்து, கருகியுள்ள நிலையில், பொத்தாம் பொதுவாக அறிக்கையில், அத்தியூர், கொசப்பாளையம் வனப் பகுதிகளில் 2000 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படுவதாகச் சொல்லப்பட்டு உள்ளது.

இத்திட்ட மதிப்பீடு எவ்வளவு, இதுவரை செலவிடப்பட்ட தொகை எவ்வளவு, எவ்வளவு கன்றுகள் நடப்பட்டன, வறுமை ஒழிப்புக்கு எவ்வளவு செயல்படுத்தப்பட்டது, மண்வளப் பாதுகாப்புப் பணிகளுக்கு எவ்வளவு செலவிடப்பட்டது என்ற விவரங்களை அமைச்சர் அறிவிப்பாரா? கடுமையான வறட்சி நிலவும் இந்த நேரத்தில்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதோடு முடியுங்கள். வனத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், வறட்சிக் காலங்களில் மரக்கன்றுகள் நடுவது கிடையாது. பருவ மழைக் காலங்களில்தான் மரக்கன்றுகள் நடப்படுகின்றன. மழையை வைத்துத்தான், தரம் குன்றிய காடுகளையும், காடுகளுக்கு அருகில், மலைகளுக்கு அருகில் உள்ள கிராமங்களையும் தத்தெடுத்து மரக்கன்றுகள் நடப்படுகின்றன. அப்படி வறட்சியைத் தாங்கக்கூடிய நாவல், புளி மற்றும் புங்கை போன்ற மரக்கன்றுகள் நடப்படுகின்றன. இரசாயன உரங்களைப் பயன்படுத்தினால் வறட்சியில் பட்டுவிடும். ஆனால் காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் இயற்கை உரங்களையும், நுண்ணுயிர் உரங்களையும் பயன்படுத்துகிறார்கள். அதனால் தண்ணீரை இழுத்து வைத்துக் கொண்டு, வறட்சிக் காலங்களில் பட்டுப் போகாமல் இருக்கின்றன. குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த இரண்டு கிராமங்களிலும் 80 சதவீதம் மரக்கன்றுகள் நல்லவிதமாக இருக்கின்றன. 20 சதவீதம் சாதாரணமாகப் பட்டுவிடும். பிறகு பருவ காலங்களில் அந்தக் கன்றுகளை அகற்றிவிட்டு புதுக் கன்றுகள் நடப்படும். ஒரு கிராமத்திற்கு கிட்டத்தட்ட 350 எக்டேர் நிலங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டு இருக்கின்றன. 50 இலட்சம் ரூபாய் மூன்று வருடங்களுக்கு அந்தக் கிராமங்களுக்குச் செலவிடப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.